இருக்கிற காரணத்தால், அகவிலைப் படியை மாற்றி அமைக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அகவிலைப் படியை மாற்ற உத்தேசம் இல்லை. மலைப் பிரதேசங்களில் விசேஷ சலுகை காட்டவேண்டுமென்றால் அது கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : அப்படி என்றால் ஹில் அலவன்ஸ் சில பேர்களுக்குக் கொடுப்பது நிறுத்தப்பட்டிருக்கிறதே, அதையாவது கொடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுதான் நான் முன்பு குறிப்பிட்டேன்.

நகைத் தொழிலாளர்கள்

***236 கே.—திரு. எம். எஸ். மணி : திரு. வை. சங்கரன் :** } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தங்கக் கட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்ட நகைத் தொழிலாளர்கள் நம் மாநிலத்தில் எத்தனை பேர்?

(இ) அவர்களில் எவ்வளவு பேருக்கு அரசினர் கடன் உதவி அளித்துள்ளனர்?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No precise information is avaiable.

(*b*) Up to 31st January 1965, 13,101 goldsmiths have been given loan assistance.

திரு. எம். எஸ். மணி : பாதிக்கப்பட்ட நகை தொழிலாளர்களில், மண் அரிப்பு தொழில் வேலைக்கு அரசினர் கடன் உதவி கிடைப்பதில்லை. அதை மாற்ற சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது இருக்கின்ற விதிகளின் படி, தங்கத்தில் வேலை செய்கிறேன் என்று மனுச் செய்த பிறகு அவர்களுக்குக் கடன் உதவி கிடையாது. கடன் வாங்கியவர்களுக்கு தங்கத்தில் வேலை செய்வதற்கு அனுமதி கொடுக்க முடியாது. இதனால் சலுகை கொடுக்காமல் இருக்கிறது. இதைச் சரியாக அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன்.

திரு. வை. சங்கரன் : இப்போது கடன் வசதி பெறுகிறவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், லக்ஷக்கணக்கான பேர்கள் பாதிக்கப்பட்டு அதில் 10 சத வீதம் பேருக்குத்தான் கடன் வசதி கிடைக்கிறது. வேலை இழந்தவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்ற காரணத்தால், அந்தந்த மாவட்டத்தில் தொழிலதிபர்களை விட்டு இவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க போதிய அளவு சர்க்கார் முயற்சி எடுக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பாதிக்கப்பட்டவர்கள் என்று சர்க்காருக்கு மனுச்செய்து கொண்டவர்கள் 54,113 பேர்கள். இதனால் லக்ஷக்கணக்கான பேர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்று சொல்வது ஆரம்பத்திலேயே சரியாக இருக்காது. இந்த 54,113 பேரில் தங்க வேலை செய்யவேண்டும் என்று மனுச்செய்தவர்கள், 22,750 பேர்கள். எஞ்சி இருக்கிறவர்கள் தங்களுக்கு நிலம் வேண்டும், கோவாபரேடிவ் சொஸைடியில் சேரவேண்டும், எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஜில் பதிவு செய்து கொண்டு வேலை கொடுக்கவேண்டும், லோன் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டவர்கள். இவ்வாறு கேட்டுக் கொண்டவர்களில் லோன் வேண்டினவர் 26,000 பேர்கள். இந்த 26,000 பேர்களின் மனுக்களை நாங்கள் பரிசீலித்ததில் 13,101 பேருக்கு கடன் கொடுக்கப்பட்டிருக்

கிறது. 6,410 பேர்களுக்கு அவர்களுக்கு தகுதி இல்லை என்று நிரா கரிக்கப்பட்டிருக்கிறது. பாக்கி 6,000-த்து சில்லரை மனுக்கள் பரிசீலனை யில் இருக்கின்றன.

திரு. வை. சங்கரன் : எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஞ் மூலமாக அவர்கள் மனுச்செய்தால் அவர்களுக்கு ப்ரிபரன்ஸ் கொடுக்க வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். பொதுவாக பரம்பரையாக தங்கத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு கல்வி அறிவு குறைவாக இருக்கிற காரணத்தால் வேலைக்குப் போக, வேண்டிய கல்வி அறிவை இவர்கள் விஷயத்தில் தளர்த்த அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வேலைக்கு எடுத்துக்கொள்கிற வர்களின் விருப்பம் அது. சர்க்காரைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு (பிரிபரன்ஸ்) முதலிடம் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் உத்தரவு போட்டிருக்கிறோம்.

திரு. எம். எஸ். மணி : தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப் பட்டவர்கள் பல தொழில்கள் நடத்த கடன் வேண்டும் என்று கேட்கிறபோது முதல் தவணையாக ரூ. 300 கொடுக்கிறார்கள். பின்பு இரண்டாவது தவணையாக ரூ. 250 கொடுக்கிறார்கள். இந்த ரூ. 250, ரூ. 300 வைத்து பெட்டிக் கடை கூட நடத்தக்கூடிய நிலைமை இல்லை. ஆகவே முதலிலேயே கடன் கொடுக்கும்போதே 600 அல்லது 700 ரூபாய் கொடுக்க ஆவன செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது அப்போதைக்கப்போது பரி சீலிக்கப்பட்டு முடிவு ஆகிறது. ஒரே தடவையில் கொடுத்தால், வேறு வகைகளில் பணத்தை செலவழித்து எந்தத் தொழில் நடத்த கடன் கேட்டார்களோ அந்தத் தொழில் நடப்பதில்லை. அதற்காகத் தான் ஆரம்பத்திலே ஒரு தொகை கொடுத்து ஏதாவது தொழில் நடக்கிறதா என்று பார்த்து பிறகு பாக்கித் தொகை கொடுக்கலாம் என்று சொல்லி இருக்கிறது.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, பணத்தைக் கொடுக்கும் பொழுது அப்படிச் செய்தாலும், பொருளாகக் கொடுக்கிறார்கள். தொழில் செய்வதற்கு சைகிள் கொடுக்கிறார்கள், அதுவும் இன்ஸ்டால் மெண்டு பேஸிசில் தான் கொடுக்கிறார்கள், முதலில் ஒரு சைகிள், இரண்டு சைகிள் கொடுக்கிறார்கள், மறுபடியும் ஒரு வருஷம் கழித்து இரண்டு சைகிள் கொடுக்கிறார்கள். ஆகவே பொருள்களை ஒரே சமயத்தில் கொடுப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொருளாக சைகிள் போன்ற வைகள் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறபொழுது, மொத்தத்தில் போதுமான அளவு சைகிள்கள் கொடுக்கவேண்டும் என்றுதான் உத்தரவுவிட்டிருக்கிறோம். 4 அல்லது 6 சைகிள்கள் கொடுக்கவேண்டும் என்பதுதான் உத்தேசம். ஏதாவது ஒரு இடத்தில் குறைவாகக் கொடுத்திருந்தால், தனியாக அதைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், சர்க்கார் அதைப் பரிசீலனை செய்யும். டைரக்டர் அவர்கள் இதை உடனடியாகத் தீர்க்க முடியும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கடன் கொடுக்கும் விஷயத்தில் 6,000 பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் வார்த்தையிலிருந்து தெரியவருகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று பரிகாரம் என்ன என்ன செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் கடன் கொடுக்கிறார்கள் என்று சொன்னவுடனே, அதற்கான விதிகளின்படி கடன் பெறுவதற்கு தகுதியில்லாதவர்கள்கூட அப்ளிகேஷன் கொடுக்கிறார்கள். அப்ளிகேஷன் கொடுத்தவர்களுக்கெல்லாம் கடன் கொடுக்கவேண்டுமென்று சொன்னால்

அது எப்படி நியாயம் என்பது அங்கத்தினர்களுக்கே தெரியும். இதையெல்லாம் விசாரணை செய்துதான் அவர்கள் தகுதியில்லாதவர்கள் விதிக்கு உட்படாதவர்கள் என்று நிராகரிக்கப்படுகிறது.

திரு. ஆ. தியாகராஜன் : உண்மையில் பொற்கொல்லர்கள், தங்கக் கட்டுப்பாட்டினால் அவதிக்குள்ளானவர்கள், தாங்கள் பொற்கொல்லர்கள் என்று ஏதாவது மனுச் செய்துக்கொண்டால், "நீங்கள் பொற்கொல்லர்கள் இல்லை" என்று அங்கே இருக்கிற அதிகாரிகள் சொல்லுகிறார்கள். அவர்கள் டொற்கொல்லர்கள் என்று நிரூபிப்பதற்கு என்ன வழியைப் பின்பற்ற வேண்டும் என்று அமைச்சர்கள் அவர்கள் தெரிவிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நாங்கள் இதற்கு விதிகள் செய்திருக்கிறோம். அங்கிருக்கிற தாசில்தாரிடமிருந்து சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வந்தால் போதும்.

திரு. எஸ். முத்துலிங்கம் : வட ஆற்காடு ஜில்லா, வந்தவாசி தாலுக்காவைச் சேர்ந்த சில பகுதிகளில் தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சில லைசென்ஸ்கள் வழங்கப்படவில்லை என்பது குறித்து அரசாங்கத்திற்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அரசாங்கம் என்றால் பெரிய "ஆர்கனைஸேஷன்". அஸிஸ்டெண்ட் டைரக்டரிடமிருந்து மந்திரி வரையிலும் அரசாங்கம்தான். என்னைப் பொறுத்தவரையிலும், அந்த விதமான புகார் வரவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். கீழ் அதிகாரிகளிடத்தில் வந்திருக்கிறதா என்பதைச் சொல்லவேண்டுமென்றால், தனிக்கேள்வி போட்டால், அவர்களைக் கேட்டுச் சொல்ல முடியும்.

Establishment of Industries in private and public sectors

* 237 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the industries, in public and private sectors already established and proposed to be established in the State with foreign aid and technical collaboration?

The Hon. Sri R. VENKATARAMAN : The following are the industries already established in the public sector in Madras State with foreign assistance and technical collaboration :

1. Integral Coach Factory, Perambur.
2. Neyveli Lignite Project, Neyveli.
3. Teleprinter Factory, Guindy.

The following is the list of industrial undertakings which are in the process of construction or are proposed to be established with foreign assistance and technical collaboration :—

1. High Pressure Boiler Plant, Tiruchirappalli.
2. Surgical Instruments Factory, Nandambakkam.
3. Raw Photographic Films Factory, Ootacamund.
4. Heavy Vehicles Factory, Avadi.
5. Defence Equipment Factory, Tiruchirappalli.
6. Petroleum Refinery.
7. Fertilizer Factory.
8. Neyveli-Salem Steel Project.